RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22423

OPEN ACCESS

# சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்

ஆ. தீபா [அ, *], எ. கற்பகம் [அ]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), கரூர்- 639007, தமிழ்நாடு, இந்தியா.

# Theories of Inappropriate Love as Pointed Out in Sangam literature

A. Deepa [a, *], E. Karpagam [a]

[a] Department of Tamil, Government Arts College, (Affiliated to Bharathidasan University), Karur-639007, Tamil Nadu, India

* Corresponding Author: deepaaarathana@gmail.com

Received: 13-06-2022
Revised: 07-09-2022
Accepted: 26-09-2022
Published: 14-10-2022

Check for updates

**ABSTRACT**

The Ettutthokai (The Eight Anthologies) and the Pathuppaattu (The Ten Idylls) are considered to be the oldest literary works of the Tamil people. The literature that appeared thousands of years ago beautifully captures the feelings of human beings, their lifestyles, and their habits. If a generation exists, then it can be attributed to the existence of society by adhering to the principle laid down by the previous generation. Any relationship formed through love will last and live on. Similarly, in the Sangam literature, the basis of the true feelings of love is inappropriate love first, only after which the chastity life begins. So, inappropriate love, which forms the basis of love, is something that all creatures have in common. The purpose of this article is to explore the theft of the love route.

**Keywords:** Eight Anthologies, Love, Pathuppaattu, Principle, Lifestyles

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் என்றாலே பாட்டும், தொகையுமாகும். சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் காதல் வாழ்க்கையை பாடுவதாக அமைந்துள்ளது. அவற்றுள் களவு, கற்பு என இருவகையாக பிரித்து அவற்றிற்கு சில நெறிகளை வகுத்து பாடியுள்ள செய்திகளும் அறியலாம். சங்க இலக்கியக்காலம் தொட்டு இன்றுவரை களவு(காதல்) என்பது எல்லா உயிர்களுக்கும் இயற்கை அமைத்து கொடுத்த ஒரு இன்பம் எனலாம். இதனை,

"எல்லா வுயிர்க்கும் இன்ப மென்பது

தானமர்ந்து வரூஉம் மேற்றாகும்"

என்று கூறுகிறார் தொல்காப்பியர் (Arunachalam, 1994). ஆண், பெண் உறவு என்பது 'களவு' வாழ்க்கைக்கு பிறகே 'கற்பு' வாழ்க்கை என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. அவ்வாறு கூறும் செய்திகளை ஆராயக் காணலாம்.

## களவு

பழந்தமிழர் வாழ்வில் இல்லறம் என்பது முதலில் களவொழுக்கத்தில் தோன்றுகிறது என்று இலக்கண, இலக்கியங்களில் கூறக்காணலாம். தொல்காப்பியர் களவு, கற்பு என்ற இரு பிரிவுகளில் தலைவன், தலைவி பண்பு நலன், ஒழுக்கம், வாழ்க்கை முறைகள் பற்றி கூறுகின்றார்.

களவு பற்றி வ. சுப. மாணிக்கம் கூறுகையில் "களவு நெறியாவது வாழ்நாள் காணும் ஓருயிர் தன் காதல் சொல்லுதற்கரிய மறுபாலுயிரைத் தானே தேர்ந்து கொள்ளும் இயற்கை நெறி" என்கிறார் (Arunachalam, 1994).

இலக்கியங்களிலும் அகம், புறம் என்ற இரு பிரிவுகளை வகுத்து அவற்றுள் மக்களின் வாழ்க்கைமுறை அனைத்தையும் பகுத்து கூறியுள்ளனர்.

இதனை,

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளந்த எழுதிணை என்ப"

என்ற நூற்பாவில் தொல்காப்பியம் அகத்திணை, புறத்திணை என்ற இரு பிரிவுகளில் வாழ்க்கை முழுவதையும் வகுத்து தொகுத்துள்ளது. இவற்றுள் அகத்திணை என்பது களவு (காதல்), கற்பு (இல்வாழ்க்கை) பற்றியும் கூறுகிறது (Arunachalam, 1994).

## அகத்திணை

கைக்கிணை, குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை இவை ஏழும் களவு வாழ்க்கைக்கு பொருந்துவன. ஆனால் கைக்கிளை, பெருந்திணை இரண்டும் காதல் வாழ்க்கைக்கு ஏற்றது அல்ல.

"காதல் என்பது உடற்பசி, உள்ளப்பசி, உயிர்ப்பசி, பிறவிப்பசி என்கிறார் (Dhatchanamoorthi, 2005).

## புறத்திணை

புறத்திணை ஏழு வகை உண்டு. இவை அனைத்தும் வீரம், கொடை, போர்க்களம், ஆட்சி திறமைப் பற்றி பேசுவன ஆகும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் திணை ஆகும்.

## களவின் இலக்கணம்

"உளமலி காதல் களவு எனப்படுவது

ஒருநான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்

யாழோர் கூட்டத்தின் இயல்பினது என்ப"

களவு வாழ்க்கை, நான்கு வேதத்துள் எண்வகை மணங்களுள் ஒன்றான காந்தருவமே களவு என்கிறது. ஒத்த வயதுடைய ஆணும், பெண்ணும் தனி இடத்தில் எதிப்பட்டுத் தாமே கூடி இன்புறுவது களவு வாழ்க்கை ஆரம்பம் ஆகும் (Narayana Velluppillai, 2015).

## எண்வகை மணங்கள்

1. பிரமம்
2. பிரசாபத்தியம்
3. ஆரிடம்
4. தெய்வம்
5. காந்தருவம்

6. ஆசுரம்

7. இராக்கதம்

8. பைசாசம்

"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்

காமக் கூட்டம் காணும் காலை

மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்

துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"

என்ற வரிகளில் எண்வகை மணங்களுள் காந்தருவம் களவு மணத்தை சேர்ந்தது என்பதை அறியலாம் (Arunachalam, 1994). இதை வடநூலார் குறிப்பிடும் மணமுறைகள் என்ற செய்தி அறியலாகிறது. இதனை தொடர்ந்து நச்சினார்க்கினியார் தொல்காப்பியர் கூறும் தமிழரின் களவொழுக்கத்தையும் வடநூலார் குறிப்பிடும் காந்தருவ மணத்தையும் ஒப்பிடும்போது,

"கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும் ஈண்டுக்

கற்பின்றிக் களவே அமையாது என்றற்கு துறையமை என்றார் (Arunachalam, 1994)."

இல்லற வாழ்க்கையின் தொடக்கமாகத் தலைவனும் தலைவியும் யாரும் அறியாமல் தம்முள் கலந்து மகிழ்வது களவு வாழ்க்கை; தமிழர் மரபில் களவு வாழ்க்கை இல்லாமல் கற்பு வாழ்க்கை அமையாது. ஆனால் காந்தருவ மணத்தில் களவு வாழ்க்கைக்குப் பின் மணவாழ்க்கை இல்லாமலும் போகலாம் எனக் குறிப்பதே நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

## காதல் அரும்புதல்

"காதலென்பது நெஞ்சத்திலும் கண்களிலும் உருவாகும் தூய அன்பாம். ஐயத்திற்கிடமின்றிக் கண்கள் அதனை மலரச் செய்ய, இதயம் அதனைக் காய்த்துக் கனியச் செய்கிறது என்கிறார் அமெரிக்கேட பெக்குனில்காம் (Dhatchanamoorthi, 2005)."

இதனையே தொல்காப்பியத்தில் களவொழுக்கத்தின் தொடர்ச்சி என்ற தலைப்பில் தொல்காப்பியர் கூறுகையில்,

"குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்

ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்"

தலைவனின் மனக் குறிப்பை அறிந்த தலைவியின் கண்ணும் கருத்தும் உடன்பட்டால் களவொழுக்கம் தொடரும் எனப் புலவர் குறிப்பர் (Arunachalam, 1994).

தலைவன் தலைவியின் கண்கள் பார்த்துக் கொண்டால் அங்கு வாய்ச்சொற்கள் இல்லாமலேயே காதல் தொடரும் என்பதை வள்ளுவர் கூறுகையில்,

"கண்ணொடு கண்ணிணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல"

என்ற குறளின் வழி அறியலாம் (Parimelalhagar, 2002).

முதன் முதலில் தலைவியைக் காணும் தலைவன் அவளின் அழகில் தன்நிலை மறந்து சிறிதுநேரம் நிற்கின்றான். அதுவே காதல் அரும்புதலுக்கு முக்கிய இடமாக அறியப்படுகிறது. இதனை,

"சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப

இழிந்துழி இழிவே கட்ட லான"

ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்ப்படும் போது அவர்களிடையே ஒருவர் மேல் ஒருவர்க்கு ஐயம் உண்டாயின் அதுவே களவொழுக்கத்திற்குச் சிறந்ததாகும். ஐயம் வரினே நிலைமை தெரியும். குறைபாடு தெரியின் களவொழுக்கம் சிறக்காது (Arunachalam, 1994).

இச்செய்தியை திருவள்ளுவர் தன் குறட்பாவில் கூறும்போது,

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை

மாதர்கொல் மாலும்என் நெஞ்சு"

அழகு மிக்க இவள் தெய்வ மகளோ? அழகு மயிலோ? காதணி பூண்ட நங்கையோ? என் நெஞ்சம் மயங்கித் தவிக்கிறது. இவ்வாறு எதிர்ப்பட்ட தலைவியைக் கண்டு தலைவன் ஐயப்படுவதை வள்ளுவர் தெளிவாக கூறினார் (Parimelalhagar, 2002).

காதலரிருவரும் ஒருவரையொருவர் காமம் கலந்த உணர்வுடன் காண்பதனாலேயே காதலுறவு அரும்புகிறது என்பதனைத் தொல்காப்பியர்,

"நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்

கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்"

என்ற நூற்பா வழி அறியலாகிறது (Arunachalam, 1994).

"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்குகணங்கு

தானைக் கொண்ட அன்னது உடைத்து"

என்ற குறட்பாவில், என் பார்வைக்கு இணக்கமாக அவளும் பார்த்தாள்; அவள் பார்வை போர்ப் படையுடன் வந்தது போலிருந்தது எனத் தலைவன் கூறுகின்றான் (Parimelalhagar, 2002).

"பாலியற் கூட்டாளியைத் தெரிந்தெடுப்பதிற் கட்புலனே முதன்மைவகிக்கிறதென்றும், ஆடவனின் காதலெண்ணங்கள் எப்பொழுதும் அழகு பற்றிய நிலையான ஆழ்ந்த சிந்தனையாகவே உள்ளனவென்றும் உளவியலறிஞர் ஆவலக்க எல்லிச குறிப்பிடுகின்றார் (Dhatchanamoorthi, 2005)."

## தலைவனின் பண்பு நலன்

இலக்கியங்களில் தலைவன் என்பவன் பல பருவங்களை கடந்து வந்தவனாக இருக்க வேண்டும். இலக்கியங்கள் ஆண்களுக்கென பருவங்கள் வகுத்து அதற்கேற்ப அவர்களின் வாழ்க்கை முறையை அமைத்துள்ளனர்.

1. பாலன்
2. மீளி
3. மறவோன்
4. திறவோன்
5. விடலை
6. காளை
7. முதுமகன்

இவ்வேழு பருவங்களில் காதல் கொள்ளும் வயது என்பவை காளை ஆகும். இப்பருவத்தில் வீரம், கொடை மற்றும் போர் திறன் வெளிப்பட்டு தலைவன் என்ற நிலை அடைகின்றான்.

களவொழுக்கத்தில் தலைவி விரும்பத்தக்க தலைவன், பெருமை மிக்கவனாகவும் உள்ளத்தில் உறுதி உள்ளவனாகவும் இருத்தல் முதன்மை ஆகும். இதனை,

“பெருமையும் உரனும் ஆடூஉ மேன”

சங்க இலக்கியத்தில் தலைவனுடைய உருவத்தோற்றத்தினில் தலைவி ஈடுபட்டுப் பேசுவதாக இடம்பெறும் நிலையை மிகுதியாகக் காணமுடிகிறது (Arunachalam, 1994).

“ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்

ஊசி போகிய சூழ்செய் மாலையன்

பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்

குயமண் டாகம செஞ்சாத்து நீவி

வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்துகொண்டு”

என்ற பாடல் வரிகளில் அவன் மகளிர் கண்களைப் போன்ற ஒளிபொருந்திய அழகிய செங்கழுநீர்ப் பூக்களை ஊசியாற் கோத்துச் சுற்றிக் கட்டின மாலையை அணிந்திருந்தான்; வெட்சிப் பூவாலான கண்ணியைத் தலையின் ஒரு பக்கத்தே சூடியிருந்தான்; வரிந்து கட்டிய வில்லையுடையவனாய், ஒப்பற்ற அன்பினை ஆய்ந்து கைக்கொண்டு உடையவன் எனத் தலைவனின் உருவத்தோற்றத்தினை தோழி செவிலித்தாயிடம் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது (Puliyur Kesigan, 2010). மற்றொருபெண் கூறுகையில்,

“குடிநன்குடையன் கூடுநர்ப் பிரியலன்

கெடுநா மொழியலன்”

என்கிறாள் (Puliyur Kesigan, 2010).

தலைவனும் தலைவியும் எல்லாக் குணங்கள் ஒத்தவராயின் எதிர்பட்டு ஒருவரை ஒருவர் காண்பர். தலைவியை விடத் தலைவன் உரு, செல்வம் போன்றவற்றில் உயர்ந்திருந்தாலும் குற்றம் இல்லை.

இதனை,

“ஒன்றே வேறே என்றுஇரு பால்வயின்

ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப

மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே”

என்ற தொல்காப்பியர் நூற்பா வழி அறியலாம் (Arunachalam, 1994).

தலைவன், தலைவிக்கு இடையே உள்ள ஒத்த பண்புகளாகப் பத்து வகைகளைத் தொல்காப்பியர் கூறுகிறார்.

“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு

உருவு நிற்த காம வாயில்

நிறையே அருளே உணர்வொடு திருஎன

முறைஉறக் கிளந்த ஒப்பினது வகையே”

ஒத்த பிறப்பு, ஒழுக்கம், ஆண்மை, ஆண்டு, அழகு, அன்பு, நிறை, அறிவு, செல்வம் என்பவையே ஒத்த பண்புகளாகும் (Arunachalam, 1994).

## தலைவியின் பண்பு நலன்

பெண் என்பவள் பிறக்கும் போது மகளாக, கணவனுக்கு மனைவியாக, குழந்தைக்கு தாயாக, புகுந்த வீட்டிற்கு மருமகளாக, மருமகனுக்கும் மருமகளுக்கும் மற்றொரு தாயாக பரிணாமம் எடுக்கும் பெண்களின் பருவங்கள் ஏழாக வகுக்கப்பட்டுள்ளது.

1. பேதை
2. பெதும்பை
3. மங்கை
4. மடந்தை
5. அரிவை
6. தெரிவை
7. பேரிளம் பெண்

களவிற்குரிய பெண்ணாக மடந்தை என்பவள் அறியப்படுகிறாள். பெண்ணாகப் பிறப்பதற்கு தவம் செய்ய வேண்டும் என பாரதியார் தன் பாடல் வழி பெண்ணின் பெருமையை உலகறியச் செய்துள்ளார்.

"உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த

உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்

அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்

அவனாலே மணவாளன் சுத்தி பெற்றான்"

என்ற வரிகளின் வழி அறியலாம் (Arunachalam, 1994).

"மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல

மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா!"

என்று தன் கவிதையில் கவிமணி பாடியுள்ளார் (Arunachalam, 1994).

பெண் என்பவள் சில பண்புகளுக்குரியவள் என்று தொல்காப்பியர் தன் நூற்பா ஒன்றில்,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"

தலைவன் பார்க்கும் போது நிலத்தைப் பார்ப்பாள்; தலைவன் பார்க்காதபோது அவனைப் பார்த்து நகைப்பாள்; நாணத்தின் பண்பாகத் திருவள்ளுவர் இந்த நிகழ்வைக் குறிப்பார் (Arunachalam, 1994).

"யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்

தான்நோக்கி மெல்ல நகும்."

என்ற குறளின் வழி அறியலாம் (Parimelalhagar, 2002).

எல்லாவற்றிலும் சிறந்த உயிரை விட மகளிர்க்கு நாணம் உயர்ந்த்தாகும். அக்காரணத்தை விடக் கற்பு மிக உயர்ந்த்து என பல இலக்கியங்களில் கூறக் காணலாம்.

## காதலும் ஊழும்

களவு வாழ்க்கையில் காதல் மனவுணர்வுகளையும், போராட்டங்களையும், அப்போராட்டத்தில் அவர்கள் வெற்றிபெறத் துடிக்கும் துடிப்பினையும் சங்கப்புலவர்கள் நன்கு உணர்ந்து விளக்கியுள்ளனர்.

“தமிழ்ப்புலவர்கள் காதலைப் பிறவிதோறும் தொடரும் புனிதமானதோர் உறவாக மதித்துப் போற்றியுள்ளனர். முன்னர் ஒருயிராய் இருந்தவர்களே ஆணம் பெண்ணுமாக உலகிற் பிறந்தனர் என்றும், இவ்விருவர் என்னும் நிலையினின்னும் உய்ய உடன் உயிர்போக வேண்டுமென்றும் ஒரு தலைவி விரும்புகின்றாள். உண்மைக் காதலின் அமரத்தன்மையைக் கற்புத்திணைச் செய்யுட்களும் விளக்கிக் காட்டுகின்றன (Dhatchanamoorthi, 2005).”

## பிரிவரிய உறவு

காதல் என்பது இரண்டு உயிர்களின் கூட்டுறவு; ஒன்றின்றி மற்றொன்று வாழ முடியாது. எனவேதான் காதலைப் பிரிவரிதாகிய தாண்டாக்காமம் என்றனர். இதுவே களவியிலின் உயிர்ப் பண்பாக அமைந்துள்ளமையைச் சங்க இலக்கியம் காட்டுகின்றது.

தலைவியொருத்தி உள்ளம் பறிகொடுத்த காதலன் ஒருவன் தன் காதலியால் தனக்கேற்பட்ட காதல் நோயைத் தீர்க்கும் மருந்து அவளைத் தவிரப் பிறரில்லை என்பதை,

“அருந்துயர் அல்லல் தீரக்கும்

மருந்து பிறதில்லையான் உற்ற நோய்க்கே”

வெறும் உடற்காமமெனில் அது வேறு யாராலும் தீர்க்கப்படத்தக்கதே. இது காதல் கலந்த காம்மாதலின் காதலித்தவளாலன்றிப் பிறரால் தீர்தல் இயலாது என்ற நற்றிணை பாடல் வலி அறியலாம் (Puliyur kesigan, 2018).

மற்றொரு பாடலில் தலைவன் தலைவிமீது மிகுந்த காதலுடையவன். ஆனால், அவளோடு கூடி மகிழும் வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவன் மிகுந்த வருத்தத்தோடு இருக்கிறான்.

இதனை,

“நெஞ்சுபிணிக் கொண்டஅஞ்சி லோதிப்

பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்

ஒருநாள் புணரப் புணரின்

அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே”

என்ற பாடல்வழி தலைவனின் காதல் திறத்தை அறியலாம் (Nagarajan, 2004).

காதலன் உள்ளத்தில் காதலியே முழுமையாக ஆட்சி புரிகின்றாள். சீறும் புயலுக்கும், சிதறும் பெருமழைக்கும், எறியும் இடிக்கும் ஈடுகொடுத்து என்றும் நிலைபெற்ற கொல்லிப்பாவை போலத் தன் காதலி தன்னெஞ்சில் நிலைபெற்றதாக தலைவன் ஒருவன் கூறுகின்றான். இதனை,

“கால் பொருது இடிப்பினும், கதழ் உறை கடுகினும்,

உரும் உடன்று எறியினும், ஊறு பல தோன்றினும்,

பெருநிலம் கிளரினம், திரு நல உருவின்

மாயா இயற்கைப் பாவையின்

போதல் ஒல்லாள் என் நெஞ்சத்தானே” (Puliyur kesigan, 2018)

காதலர் நெஞ்சத்தை அவர்கள் கூறுகையில்,

“மண் சுழலினும் கடல் பொங்கினும்

மலை பெயரினும் விண் வீழினும்

அரசு விதிப்பினும் மக்கள் எதிப்பினும்

வருவரு வருக என்று அச்சம் அறியார்"

என்ற பாடல் வரிகளில் எவ்வகை சூழலிலும் காதலர் தம் காதலில் உறுதியாக அச்சமில்லாமல் வரும் இன்னல்களை ஏற்றுக்கொண்டு சமூகத்தில் வாழ்ந்தனர் என்ற செய்தியைக் காணலாம் (Nagarajan, 2004).

தலைவியை நல்லிரவில் காணவரும் தலைவன் தலைவிக்குப் பதில் தோழி வருதலைக் கண்டு கவலையுற்றான். தோழி இனி உன்னைக் காண தலைவி வரமாட்டாள் என்று கூற, தலைவன் தலைவியை எண்ணி மடலேறுதல் அது குற்றமாகும். தலைவியைப் பிரிந்து வாழ்தலினும் உயிர்விடுதல் சாலச்சிறந்த்து என்கின்றான் தலைவன் ஒருவன்.

இதனை குறுந்தொகை பாடலில்,

"காலையும் பகலும் கையறு மாலையும்

ஊர்துஞ்சி யாமமும் விடியலும் மென்றிப்

பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்

வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே" (Nagarajan, 2004)

## களவில் தலைவியின் துயர் நிலை

தலைவி விட்டுபிரியும் தலைவன் காமத்துயர் கொண்டு வாடும் நிலையொன்று மட்டுமே தலைவன்பால் காணப்படுகின்றன. தலைவன் தன்னுடைய பெற்றோர்க்கு அஞ்சும் நிலையோ, தன்னூராரின் பழிச்சொல்லுக்கோ அவன் அஞ்சும் நிலையோ இலக்கியத்தில் இடம்பெறவில்லை. ஆனால், தலைவியின் நிலையோ முற்றிலும் மாறுபட்டது. பெண் என்பவள் சமூக கட்டமைப்பிற்குள் உள்ளடக்கப்பட்ட ஒரு நிலை இன்றுவரை இருந்துகொண்டே வருகின்றன. எத்தனையோ இலக்கண, இலக்கியங்களில் பெண்களுக்கென ஒரு கட்டமைப்பு இருந்துகொண்டே இருக்கின்றன. சங்க இலக்கியங்களிலும் அது விதிவிளக்கன்றே.

சங்க இலக்கியத்தில் களவுத்திணைப் பாடல்களிற் பெரும்பாலானவை தலைவியின் துயரத்தை வெளிப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன.

தலைவியொருத்தி தன் தோழியிடம் துன்பங்களைக் கூறுகையில்,

"பெருங்கடல் நாடன் பிரிந்த புலம்பும்

உடன்ற அன்னை அமரா நோக்கமும்

வடந்தை தூக்கும் வருபணி அற்சிரச்

சுடர்கெழு மண்டிலம் அழுங்க ஞாயிறு

குடகடல் சேரும் படர்கூர் மாலையும்

அனைத்தும் அடூஉ நின்று நலிய உஞற்றி"

என்ற வரிகளில் தலைவன் பிரியமாட்டேன் என்று கூறி இப்போது பிரிந்து சென்றுவிட்டார். அவருக்காக காத்திருக்கும் தருணம் தன்னை வாட்டுகின்றன என தலைவன் ஊரின் பெருமைகளைக் கூறிக்கொண்டே தன் துயரத்தைத் தன் தோழியிடம் கூறுகிறாள் தலைவி (Puliyur Kesigan, 2010).

## முடிவுரை

காதல் என்பது உயர்திணைக்கு மட்டுமன்று, அது எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான ஒருவித அன்பு ஆகும். அஃறிணை உயிர்களுக்கும் இது பொதுவே. காதல் இல்லையேல் இவ்வுலகு இல்லை எனலாம். ஒரு பொருள் அல்லது மனிதர்கள் மீது கொள்ளும் அன்பும் காதல் என்று கூறலாம்.

காதல் இல்லை என்றால் இவ்வுலகில் எவ்வுயிரையும் நாம் நேசிக்க முடியாது. இதற்கு மனிதர்களுக்கு மட்டும் என்ன விதிவிளக்கா! புலவர்கள் காதல் என்பதை ஒரு வரைமுறையில் கொண்டு வந்த முறையே சங்க இலக்கியங்கள் எனலாம். களவு அதன்பின் கற்பு என்று வகுத்துத் தொகுத்துள்ளனர். பிரிவு இல்லையேல் எந்த ஒன்றையும் நாம் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. பிரிவிலும் ஏற்படும் ஒருவித அன்பு, காதல் இவையே அவற்றின் மீது அளவுகடந்த பாசத்தை வெளிப்படுத்துகின்றது. அது காதல் வாழ்க்கையில் முக்கியமான ஒரு அங்கம் வகிக்கின்றது. தலைவன் எப்பொழுதும் தலைவியைப் பற்றிச் சிந்திப்பதில்லை. தனிமையில் இருக்கும்போதும் தலைவியைக் காண வரும் பொழுது தலைவியின் நினைவுகள் தலைவனை வாட்டுகின்றது. ஆனால் தலைவி நொடிபொழுதும் தலைவன் நினைவில் இருப்பதால் சங்க இலக்கியங்களில் தலைவி பற்றிய அதிக செய்திகள் காணலாம். அகத்திணையில் தலைவன், தலைவி பற்றிய செய்திகள் அதிகம் காணலாம். புறத்திணையில் தலைவன், பகைவர், மறவர், போர் பற்றியச் செய்திகளே அதிகம் காண முடியும்.

## References


Arunachalam, M., (1994) Tholkappiyam Porulathikaram Agathinaiyiyal Urai Valam, Madurai Kamaraj University, Madurai, India.

Dhatchanamoorthi, A., (2005) Sanga illakkiyam unarthum Manitha uravukal, Ainthinai Pathippagam, Chennai, India.

Nagarajan, V., (2004) Kurunthogai moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

Narayana Velluppillai, M., (2015) Nambiyagap Porul Thelivurai, Mulai Niliyam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2010) Agananooru, Paari Nilaiyam, Chennai, India.

Puliyur kesigan, (2018) Nattrinai, Paari niliyam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License